# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | பங்குனி - 26 | 09-04-2003 | புதன்கிழமை | ஓசை 50



N.E.C

யாழ் சாலை, கிளிநொச்சி.

A/L 2005 இற்கான புதிய பிரிவு வகுப்புக்கள் 12.04. 2003 சனி 09.00 கலை, வர்த்தகப் பிரிவும், 11.00 கணித, விஞ்ஞானப்பிரிவும் ஆரம்பம்.

- நிர்வாகி -

(சி-8061)


## திருமலை இசை, நடன, நாடக விழாவிற்கு கால்கோள் இட்டவர் தேசியத்தலைவரே

### கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர்

(திருமலை)

தமிழீழத் தேசியத் தலைவரின் கருத்தில் தான் திருகோணமலையில் இசை, நடன, நாடக விழா கால்கோள் கொண்டது. அவர் தனது பூரண ஒத்துழைப்பை நல்கி இந்த விழாவை நடத்திக்கொண்டிருக்கிறார் என விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் நேற்று இவ்விழா ஆரம்பமானபின் செய்தியாளர்களுக்குக்கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஒரு நீண்ட நாள் கனவு நிறைவேறிக் கொண் டிருக்கின்றது.

மானுடத்தின் தமிழ்க் கூடல் -2 என்று சொல்லக்கூடிய அளவிலே இது ஒரு கலைஞர்களின் சங்கமிப்பாக இருக்கின்றது.

(08ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின்

## அமெரிக்க மாநாட்டில் இந்தியா பங்குபற்றும்

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் முன்னோடி மாநாட்டில் இந்தியா பற்றுபற்றவுள்ளது. எதிர்வரும் 14ம்திகதி நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் இந்தியா முதல் தடவையாக பங்குபற்றுவதாக அமெரிக்காவில் உள்ள சிறிலங்கா தூதரகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ரிச்சட் ஆர்மிரேச் வரவேற்புரை நிகழ்த்தவுள்ளார். இம்மாநாட்டில் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர்

(08ஆம் பக்கம் பார்க்க)

### சீன மீன்பிடிக் கப்பல் மீதான தாக்குதல்

# கண்காணிப்புக் குழுவின் இறுதி அறிக்கையானது பக்கச் சார்பானதெனச் சந்திரிகா விசனம்!

### விசேட விசாரணை நடத்த கடற்படைத் தளபதிக்கு உத்தரவு

(கொழும்பு)

**சீன மீன்பிடிப்படகு அண்மையில் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக்குழு வெளியிட்டஇறுதி அறிக்கை குறித்துச் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பெரும் விசனம் தெரிவித்துள்ளார். இதேவேளை, இச்சம்பவம் தொடர்பாக விசேட விசாரணை ஒன்றை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு சிறிலங்கா கடற்படைத் தளபதிக்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.**

போர்நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலவ்சனுக்கும் சிறிலங்கா கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரிக்கும் அனுப்பி வைத்துள்ள கடிதங்களிலேயே சனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளதாக சனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீன மீன்பிடிப்படகு தாக்கப்

(08ஆம் பக்கம் பார்க்க)

## யசுகி அகாஷி இன்று அமெரிக்கா புறப்படுகிறார்

(டோக்கியோ)

சிறிலங்கா விவகாரங்களுக்கான ஜப்பானியக் குழுத் தலைவர் யசுகி அகாஷி எட்டுநாள் விஜயமொன்றை மேற்கொண்டு இன்று அமெரிக்கா புறப்படுகிறார். அங்கு அவர் அமெரிக்க மற்றும் ஐ.நா. அதிகாரிகளைச் சந்தித்து இலங்கையில் நடைபெற்றுவரும் சமாதான நடவடிக்கைகள் குறித்து பேசுவார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## கரடிப்போக்கு சந்திப்பகுதியில் மினி பஸ் குடைசாய்ந்தது

(அலுவலக செய்தியாளர்)

கிளி. கரடிப்போக்குச் சந்திக்கும் பரந்தன் சந்திக்கும் இடையில் மினி பஸ் ஒன்று ஏ-9 பிரதான வீதியை விட்டு விலகி குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியது. மேற்படி சம்பவம் நேற்று பகல் 11.00 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு மினி பஸ் சென்று

(08ஆம் பக்கம் பார்க்க)



## கண்காணிப்புக்குழுத் தலைவர்-பதுமன் சம்பூரில் நேற்று சந்தித்துப் பேச்சு

### நடைமுறைகள், நெருக்கடிகள் குறித்து ஆராய்வு

(திருமலை)

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலவ்சன் திருகோணமலை மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டளைத் தளபதி கேணல் பதுமன் அவர்களை நேற்றுச் சந்தித்து உரையாடியுள்ளார்.

திருகோணமலை சம்பூரில் இச்சந்திப்பு இடம்பெற்றது. திருகோணமலையில் இருந்து சிறிலங்கா கடற்படைப்படகு மூலம் மூதூர் சென்ற ரெலவ்சன் மற்றும் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள், திருகோணமலை மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் பதுமன், திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் ஆகியோருடன் காலை 10.00 மணிக்கு உரையாடலை ஆரம்பித்

(08ஆம் பக்கம் பார்க்க)

## இசை, நடன, நாடக விழா திருமலையில் சிறப்புற ஆரம்பம்

கலை பண்பாட்டுக் கழகத்தின் இசை, நடன, நாடக விழா - 2003 - மானுடத்தின் தமிழ்க் கூடல் - 02 நேற்று திருகோணமலையில் வெகு சிறப்பாக ஆரம்பமாகியுள்ளது. திருகோணமலை விவேகானந்தாக் கல்லூரி கலை அரங்கில் இந்நிகழ்வு இடம் பெறுகின்றது.

எம்.ஜ.ஏ. ஜபார் தலைமையில் இந்நிகழ்வுகள் இடம் பெற்றன. இதில் தமிழீழ தேசியக் கொடி

(08ஆம் பக்கம் பார்க்க)






### சமாதான முயற்சிகளினால்

## உலகில் இலங்கை முக்கிய இடம்பெறுகிறது

(கொழும்பு)

சமாதான முயற்சிகளால் உலகில் இலங்கை ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது என அவுஸ்திரேலிய இலங்கை நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பொன்ரல்ஸ் தெரிவித்துள்ளார்.

சிறிலங்காவின் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிசின் அழைப்பை ஏற்று கொழும்பு வந்திருக்கும் அவுஸ்திரேலிய குழுவில் பலர் அங்கம் வகிக்கின்றனர்.

இக்குழுவினர் நேற்று சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச, வெளிவிவகார அமைச்சர் டிரோன் பர்னாண்டோ ஆகியோரைச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

# பெண்கள் தொழிற்பயிற்சி நிறுவனத்தின் கண்காட்சியும் பரிசளிப்பும்



கண்காட்சியை கேணல் விதுஷா திறந்து வைக்கிறார்.





மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகன், கேணல் விதுஷா, கேணல் துர்க்கா உட்பட பலரும் கண்காட்சியைப் பார்வையிடுகின்றனர்.



பரிசளிப்பு நிகழ்வு மேடையில்...



கேணல் தீபன் அவர்கள் பயிற்சியை முடித்துக்கொண்ட பயிற்சியாளர் ஒருவருக்கு சான்றிதழ் வழங்குகிறார்.



கேணல் துர்க்கா அவர்கள் பயிற்சியை முடித்துக்கொண்ட பயிற்சியாளர் ஒருவருக்கு சான்றிதழ் வழங்குகிறார்.

படங்கள்: சோதி

## உலகை அச்சுறுத்திக்கொண்டிருக்கும் சார்ஸ்(SARS) தொற்று நியுமோனியா

இந்நோயின் தாக்கம் கடந்த வருடம் டிசம்பர் மாதத்தில் சீனாவின் "குவாங் டொங்" மாநிலத்தில் காணப்பட்டிருந்தும் அதனை உரிய காலத்தில தெரியப்படுத்தத் தவறியதன காரணத்தால் இவ்வருடம் இரண்டாம் மாத நடுப்பகுதியிலே இனங் காணப்பட்டதாக பத்திரிகைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்போது இந்நோயின் தாக்கம் வியட்னாம், சீனா, கொங்கொங், சிங்கப்பூர், மலேசியா, தாய்வான், தாய்லாந்து, கனடா, அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, நியூசிலாந்து, பிரிட்டன் உள்ளிட்ட இருபது நாடுகளில் பரவத் தொடங்கியுள்ளது. இதுவரையில் மொத்தமாக 98 பேர் உயிரிழந்ததுடன் 2500ற்கு மேல் நோய்த் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இவ்வாண்டின் ஆரம்பதிலே உலகினைக் கிலிகொள்ள வைத்துக் கொண்டிருக்கும் ஒருவித கொடிய தொற்று நியூமோனியா ஆகும்.

இவ்வாண்டு ஆரம்பத்திலிருந்து உலக நாடுகளை அச்சுறுத்திய இந்நோய்த்தாக்கம் 05.04.2003 அன்று வெளிநாட்டவர் இருவர் இலங்கைத் துறைமுகத்தில், விமான நிலையத்தில் இந்நோய்த் தொற்றுடன் இனங்காணப்பட்டு மேலதிக பரிசோதனை, சிகிச்சை என்பவற்றிற்காக முல்லேரியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனவே தற்போது எமது பிரதேசத்திலும் தென்னிலங்கையிலிருந்தும் ஏனைய நாடுகளிலிருந்தும் பல்வேறு வகையான தேவைகளின்பொருட்டு வந்து தங்கிச் செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதால் இந் நோயின் தொற்றிலிருந்து பாதுகாக்க விழிப்பாக இருக்கவேண்டியது அவசியமாகும். முதற் கட்டமாக் இந்நோய் தொடர்பாக அனைவரும் அறிய வேண்டியத அவசியமானதாகும். இந்நோயின் தாக்கத்தால் மருத்துவ உத்தியோகத்தர்களும், மருத்துவ ஆராய்ச்சியாளர்களும் இறந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இது ஒரு வைரஸ் நோயாகும்.

நோய்க்கான நோயரும்பு காலம் 3-7 நாட்களாகும்.

நோய்க்கான அறிகுறி: தொற்றின் ஆரம்பத்தில் குளிருடன் கூடிய காய்ச்சல், அலுப்பு, உடற்குத்துழைவு, தலையிடி போன்றவற்றுடன் தடிமல் குணமும் சேர்ந்து காணப்படும். இந்நிலையில் இரத்தப் பரிசோதனை செய்து பார்த்தால் வெண்குருதிச் சிறுதுணிக்கையில் (WBC) குருதிச்சிறுதட்டுக்களின் எண்ணிக்கையும் குறைவடைந்து காணப்படலாம். பின்பு 3-7 நாட்கள் கழித்து வரட்சியான இருமலும், மூச்சுவிடச் சிரமமும் ஏற்படும். இந்நிலையில் நெஞ்சினைப் பரிசோதித்துப் பார்க்கும்போது அல்லது "x" கதிர்ப்படம் எடுத்துப் பார்க்கும் போது நியுமோனியாவிற்குரிய தடயங்கள் தென்படும்.

நோய் தொற்றும் முறை: இந்நோய்த் தொற்றுள்ளவர் இருமும்போதும், தும்மும்போதும் சுவாசவழியூடாக வெளியே தெறிக்கின்ற திரவத்துளிகளில் உள்ள கிருமிகள் மூலமும், நெருங்கிப் பழகும போதும் மூக்கால் வழியும் நீர், சளி போன்றவற்றில் உள்ள கிருமிகளாலும் தொற்றுகின்றது.

எனவே, இந்நோயின் தாக்கத்திலிருந்து விடுபட வேண்டுமாயின் நோய்வந்தபிறகு குணப்படுத்துவதனைவிட நோய்வரும முன் காப்பு நடவடிக்கைகளில் முக்கிய கவனம் செலுத்தப்படவேண்டும்.

கீழ்க்காணும் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடியுங்கள்

1. நோய்பரவும் இடங்களுக்கு பயணம் செய்வதனை இயலுமானவரை தவிர்க்கவேண்டும்.
2. நோய்பரவும் சூழ்நிலை காணப்பட்டால் தற்காலிகமாக அவ்விடங்களில் ஒன்றுகூடும் நிகழ்வுகளைத் தவிர்க்கவேண்டும்.
3. அவசியதேவையின்றி மருத்துவமனைகளுக்குச் செல்வதை தவிர்த்தல் வேண்டும்.
4. சுவாச வழித் தொற்றின் அறிகுறியுள்ள அனைவரும் தாமதமின்றி மருத்துவமனைகளில் சிகிச்சை பெறவேண்டும்.
5. தொற்றுப்பரவும் சாத்தியமுள்ள இடங்களில் வாழும் அனைவரும் வாயையும், மூக்கையும் மூடி (மாஸ்க்-வாய்.மூக்கு கவசம்) அணிந்துகொள்ளவேண்டும்.
6. ஆட்களுடன் நெருங்கிப் பழகுவதனைத் தவிர்க்கவேண்டும்.
7. கூடுதலாக இந்நோயின் தாக்கத்திற்கு மருத்துவர்களும், மருத்துவ ஊழியர்களும், மருத்துவ ஆய்வாளர்களும் ஆளாகியுள்ளமையால் நோயாளர்களுடன் தொடர்புபடும் மருத்துவ உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மாஸ்க் (வாய்மூக்குக் கவசம்) பாவித்து கடமையில் ஈடுபடல் வேண்டும்.

இந்நோயின் தாக்கத்திற்குட்பட்டவர்களில் 10-20% அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் வைத்து சிகிச்சை மேற்கொள்ளவேண்டியவர்கள். உலக சுகாதார நிறுவனத்தின் தகவலின்படி 3 வீதமானோர் இந்நோயினால் இறக்கின்றனர். எனவே எம் மக்களாகிய நீங்கள் இந்நோய்த்தொற்றிலிருந்து பாதுகாக்க மேற்கூறப்பட்ட சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு தமிழீழ சுகாதார சேவையினர் வேண்டுகை விடுத்துள்ளனர்.


### வரி விளம்பரம்

**வகுப்புகள் ஆரம்பம்**

முல்லை மாணவர் மன்றம் சிவனநகர் புதுக்குடியிருப்பு.வணிக மாணவர்களுக்கு, 2004 பிரிவு மாணவர்களுக்கான துரித வகுப்புக்களும் 2005 பிரிவு மாணவர்களுக்கான புதிய வகுப்புக்களும் ஆரம்பம், 09.04.2003 புதன் கிழமை மாலை 5 மணிக்கு, கணக்கீடு திரு. ஜெ.செல்வன், வணிகக் கல்வி திரு. ந.ஜெயசுதன், பொருளியல் பிரபல ஆசிரியர். நிர்வாகி (2827)



### தமிழீழ மாவட்ட நீதிமன்று
### மட்டு/அம்பாறை

வழக்கு இல: 23/03
தன்மை:- மணநீக்கம்.

சிவகுமார் அரசமலர்,
14/24, பாரதி ஒழுங்கை,
1ஆம் குறுக்கு, மட்டக்களப்பு.
வழக்காளி.

சின்னக்கண்டு சிவகுமார்,
30/01 கோவிந்தன் வீதி,
மட்டக்களப்பு.

வேறு முகவரி:
சின்னக்கண்டு சிவகுமார்,
மே/பா சின்னக்கண்டு அன்னபூரணம்,
கணேஸ்வரம்,அணிஞ்சிலடி,
அளவெட்டி, யாழ்ப்பாணம்.
எதிராளி

**பகிரங்க அறிவித்தல்**

மேற்படி வழக்கு இலக்கத்தைக்கொண்ட மணநீக்க வழக்கானது வழக்காளியால் எதிராளிக்கெதிராக தாக்கல்செய்யப்பட்டு எதிராளிக்கு நீதிமன்றினூடாக அழைப்பாணை விடப்பட்டு எதிராளி குறித்த முகவரியிலிருந்து மேற்படி யாழ்ப்பாண முகவரிக்குச் சென்றுவிட்டதாக முறைநிறைவேற்றுநர் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட அழைப்பாணை அறிக்கையின்படி இப்பகிரங்க அறிவித்தல் வெளிப்படுத்தப்படுகின்றது. இப்பகிரங்க அறிவித்தல் மூலம் வெளிப்படுத்தப்படும் தவணையான 23/04/2003ம் நாள் அன்றோ, அல்லது அதற்கு முன்னரோ எதிராளியோ அல்லது எதிராளிசார்பில் சமூகமளிக்க அக்கறையுடையவர்களோ மன்றில் தோன்றி சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறும்பட்சத்தில் இவ் வழக்கு ஒரு முக விளக்கத்தினூடாக விளக்கம் மேற்கொள்ளப்பட்டு வழக்காளி சார்பில் தீர்ப்பு வழங்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுமென இத்தால் பகிரங்கமாக அறிவிக்கப்படுகின்றது.

**வே. புவிரதன்**
சட்டவாளர் (வரைபு)

மன்றின் கட்டளைப்படி பதிவாளர்,
மட்டு-அம்பாறை மா.நீ.மன்று,
பட்டிப்பளை.
(3072)

# பாக்தாத்தில் மூர்க்கத்தனமாக படையினர் மோதல்
# கூட்டுப்படைகளின் நடவடிக்கையில் திடீர் மாற்றம்!

## - விமானத் தாக்குதலின் தீவிரம் குறைகிறது


**முக்கிய இலக்குகளைத் தாக்கிவிட்டு திரும்பும் தந்திரோபாயத்தை அமெரிக்கக் கூட்டுப் படையினர் தற்போது ஈராக்கில் கடைப்பிடித்து வருகின்றனர். இராணுவ நிபுணர்கள் இவ்வாறான தந்திரோபாய மாற்றத்தை உறுதிசெய்துள்ளனர்.**

இருபதாவது நாளை எட்டிவிட்ட நிலையில் ஈராக் போர் நிலவரம் மேலும் மோசமான கட்டத்திற்குச் சென்றுகொண்டிருக்கிறது. அமெரிக்க கூட்டுப் படைகள் மேலும் முன்னேறிவரும் நிலையில் ஈராக்கியப் படையினரும் அவர்களை எதிர்த்து மிகவும் மூர்க்கத்தனமாகப் போரிட்டு வருகின்றனர். போர் தலைநகர் பாக்தாத்துக்குள்ளும் நடைபெற்று வருகின்றது.

இத்தகைய நிலையில் பாக்தாத் நகரிற்குள் புகுந்து முக்கிய இலக்குகளை தாக்கிவிட்டு திரும்பிவிடும் போர் தந்திரோபாயத்தை அமெரிக்க கூட்டுப்படைகள் தற்போது கடைப்பிடிப்பதாக இராணுவ நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். விமானத் தாக்குதல்களுக்கான இலக்குகளை அவர்கள் இனம் கண்டுவிட்டு திரும்புவதாகவும் இந்நிபுணர்கள் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறான நிலையில் பாக்தாத்திலுள்ள சதாமின் மாளிகை ஒன்றுக்காக இரண்டாவது நாளாக இரு தரப்புப் படைகளும் கடுமையாகப் போரிட்டு வருகின்றன. கூட்டுப் படைகள் நேற்று முன்தினம் இரு மாளிகைகளைக் கைப்பற்றியதாக அறிவித்திருந்தமை தெரிந்ததே. இந்நிலையில் இதனை மீட்கும் பொருட்டு ஈராக்கியப் படைகள் நேற்று 2-வது நாளாக மூர்க்கத்தனமாகப் போரிட்டு வருவதாகவும் மாளிகை வளாகம் ஒன்றில் நான்கு அமெரிக்க டாங்கிகள் சிக்குண்டு இருப்பதாகவும் ஈராக் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும், இரவு வேளைகளில் கூட்டுப் படைகளின் விமானத் தாக்குதலின் வேகம் சற்றுக் குறைவடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. அமெரிக்க படைகள் பாக்தாத்தின் பல பகுதிகளுக்குள் ஊடுருவியிருப்பதே இதற்கான காரணம் எனவும் கூறப்படுகிறது.



பாக்தாத்திலுள்ள சதாம் ஹுசைன் மாளிகையில் குண்டு வெடிப்புக்களால் எழும் புகைமண்டலத்தினூடு பறவைகள் பறந்து செல்கின்றன.



பாக்தாத்தில் ஈராக்கிய பீரங்கி வாகனமொன்றைக் கடந்து செல்லும் சிறுவன்

## சதாமின் மாளிகையொன்று B-1 தாக்குதலில் தரைமட்டம்!


பாக்தாத்தில் சதாம் ஹுசைனின் மாளிகை ஒன்றின் மீது நேற்று முன்தினமிரவு அமெரிக்க B-1 ரக விமானங்கள் பாரிய குண்டுகளை வீசி தாக்கியதில் அந்த மாளிகை முற்றாகத் தரைமட்டமாகியது.

சுமார் 900 கிலோ நிறையுடைய குண்டுகள், குறித்த மாளிகைமீது வீசப்பட்டதாகவும் இதில் சனாதிபதி சதாம் ஹுசைன் மற்றும் அவரது இருபுதல்வர்களும் கொல்லப்பட்டோ அல்லது காயமடைந்தோ இருக்கலாம் என அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ட்ரம்ஸ் பீல்ட் தெரிவித்துள்ளார்.

## எதிர்ப்பாளர்களுக்கு சிறைவாசம்!

கியூபாவில் கம்யூனிச அரசாங்கத்தை எதிர்க்கும் 78 அதிருப்தியாளர்களில் 36பேருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு 12 தொடக்கம் 27ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



படைவீரர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதான ஈராக்கிய விவசாயி ஒருவரை அமெரிக்க தரையிறக்கும் படைஅணிவீரர் விசாரணை செய்கின்றார்.

## அல்ஜெசீரா மீது தாக்குதல்!

(பாக்தாத்)

ஈராக்கின் தலைநகரான பாக்தாத்தில் இயங்கும் கட்டார் அல்ஜெசீரா தொலைக்காட்சி நிறுவனத்தின் அலுவலகம் ஒன்று அமெரிக்க ஏவுகணைத் தாக்குதலில் சேதமடைந்துள்ளது. அங்கு கடமையாற்றிய நான்கு செய்தியாளர்கள் காயமடைந்துள்ளனர்.

பாக்தாத்தின் குடியிருப்பு பகுதியில் இந்த அலுவலகம் அமைந்திருந்தது.

## சிட்னியில் ஆர்ப்பாட்டம்; போர்க்கப்பல் தடுத்து நிறுத்தம்!

(சிட்னி)

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த போர் எதிர்ப்பாளர்கள் ஈராக் நோக்கிப் புறப்படவிருந்த போர்க்கப்பலொன்றைத் தடுத்து நிறுத்தியுள்ளனர். நேற்று சிட்னி துறைமுகத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

சங்கிலி மூலம் கப்பலுடன் தம்மைப் பிணைத்துக்கொண்டு அதனை செல்லவிடாமல் சிலர் ஆர்ப்பாட்டம் செய்தனர். அவ்வாறே கப்பலுக்கு முன்னால் நீருக்கு அடியில் [illegible]ளை ஏற்படுத்தி அதன் பயணத்தைத் தடுத்து நிறுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து கப்பல் பயணம் தற்போது கைவிடப்பட்டுள்ளது. இது [illegible]ர்ந்து பயணத்தைத் தொ[illegible] என்பது பற்றித் தெரியவில்லை.

## "சார்ஸ்" நோயினால் பொருளாதாரப் பின்னடைவு

"சார்ஸ்" எனப்படும் மூச்சுத்திணறல் நோயினால் இந்தப் பிராந்தியத்தின் பொருளாதாரம் மோசமாகப் பாதிக்கப்படும் என்று சிங்கப்பூர் பிரதமர் கோசோதொங் தெரிவித்துள்ளார்.

புதுடில்லிக்கு மூன்று நாள் பயணம் மேற்கொண்டுள்ள அவர் மேலும் தெரிவிக்கையில் விமான பயணிகளின் எண்ணிக்கை குறைந்து சுற்றுலாப் பயணத்துறை மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறினார்.

## இடைக்கால அதிகார சபை அமைக்க விசேட குழு ஈராக் பயணமாகிறது!

ஈராக்கில் இடைக்கால அதிகார சபை ஒன்றை ஏற்படுத்துவது குறித்து ஆராய விசேட குழு ஒன்றை இவ்வாரம் அங்கு அனுப்பிவைக்க இருப்பதாக அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் அறிவித்துள்ளார்.



பஸ்ராவில் ஈராக்கிய தாக்குதலைமுறியடித்து பிரிட்டிஷ் படையினர் முன்னேறுகின்றனர்.

அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூபுஷ்ஷுடன் வட அயர்லாந்துக்கு பயணமான அவர் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

ஈராக்கில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகள் நடத்தும் யுத்தம் எதிர்பார்த்தபடி வெற்றிகரமாக அமைந்துள்ளதால் அந்த நாட்டின் எதிர்காலம் குறித்து பேச வேண்டிய நேரம் வந்துவிட்டது.

ஈராக்கில் இருந்து நாடுகடத்தப்பட்டவர்களையும் தற்போது ஈராக்கில் இருப்பவர்களையும் கூட்டிணைத்து அதிகாரசபை ஒன்றை அமைக்க அமெரிக்கா எண்ணியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



பஸ்ராவில் அழிக்கப்பட்ட கல்லூரியொன்றிலிருந்து நாளிதழைப் படிக்கும் பிரிட்டிஷ் படையினர்.

# தேசிய அரசாங்கம் சாத்தியமாகுமா?

**வேலவன்**

**தொடர்பு சாதன அமைச்சு மீது எப்பொழுதும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு கோபம் உண்டு. அது தன்னைப் பற்றிய அவதூறுப்பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருவதாக அவர் குற்றம் சாட்டிவருகிறார். இப்பொழுது இந்தியாவுக்குச் சென்றுள்ள அவர் மீண்டும் திரும்பியதும் தொடர்புசாதன அமைச்சைப் பொறுப்பேற்கக் கூடும் என ஊகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.**

**ஜே.** வி.பி - யுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் - தேசிய அரசாங்கம் சில அமைச்சுப் பொறுப்புக்களைப் பறிக்க சனாதிபதி சந்திரிகா முயற்சி - அரசாங்கத்தைக் கலைத்துவிடுவது குறித்து ஆலோசனை - சனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் லக்ஸ்மன் கதிர்காமர் சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் சந்திப்பு என மாறுபட்ட - முரண்பட்ட பல தகவல்கள் கடந்தவாரம் தென்னிலங்கை அரசியல் வட்டாரங்களிலிருந்து வெளிவந்தன.

ஜே.வி.பி.யுடனான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றுக்கு பொ.ஐ.மு. நெருங்கிவிட்டதாக ஜே.வி.பி. அறிவித்துக்கொண்டிருந்தது. ஆனால் திடீரென "புரிந்துணர்வு ஒப்பந்தம் பற்றி தம்முடன் பேசிக்கொண்டு அதே சமயம் தேசிய அரசாங்கமொன்றை அமைக்க ஐ.தே.க.அரசாங்கத்துக்கு பொ.ஐ.மு. கைகாட்டுவதாக குற்றம் சாட்டியிருந்தது.

தேசிய அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பாகவும், ஜே.வி.பி.யுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாகவும் மாறி மாறிப் பேசப்படுவது வழமையான தொன்றாகும்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பதவி ஏற்ற ஆரம்பகாலத்தில் தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என பொ.ஐ.மு.விலுள்ள முக்கிய பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் வலியுறுத்தி வந்தனர். முக்கியமாக பௌசி, ரிச்சாட் பத்திரண போன்றோர் இது குறித்து வலியுறுத்தினர். ஆனால், அப்பொழுதிருந்த சூழ்நிலையில் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மூர்க்கத்தனமாக மறுத்து விட்டார்.

தேசிய அரசாங்கம் அமைப்புத் தொடர்பாக பேசிய பௌசி, பத்திரண உட்பட மேலும் சில பொ.ஐ.மு. பாராளுமன்ற உறுப்பினர்கள் இதன் காரணமாக கட்சிக்குள் பலத்த நெருக்கடிகளைச் சந்தித்தனர். சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இதற்காக ரிச்சர்ட் பத்திரணவைத் "துரோகி" என்று கூட வர்ணித்திருந்தார். இன்றும் கூட இவர்கள் அதிருப்தியாளர் வரிசையிலேயே சேர்க்கப்பட்டுள்ளனர். அண்மையில் கொழும்பில் சிங்கள இனவாதக் கட்சிகள் ஒழுங்கு செய்திருந்த ஊர்வலத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி கலந்துகொண்ட போது இவர்கள் ஊர்வலத்தில் பங்கேற்கச் சென்றபோதும் ஒதுக்கியே வைக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் இதற்காக தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் முயற்சியை பொதுசன ஐக்கிய முன்னணி எடுக்காது எனக் கூறிவிட முடியாது. ஆனால் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் முயற்சி சாத்தியப்பாடானதா? என்பதும் கேள்விக்குரிய தொன்றே.சனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைப் பொறுத்தவரை பொலிஸ் படையைக் கட்டுப்படுத்தும் உள்த்துறை அமைச்சு பாதுகாப்பு அமைச்சு, மற்றும் தொடர்பு சாதன அமைச்சு என்பன அவர் கையில் இல்லாதது பெரும் கவலைக் குரியதொன்றாக உள்ளது. பாதுகாப்பு அமைச்சின் அதிகாரம் அவர்கையில் இல்லாத போதும் முப்படைகளுக்கும் தளபதி என்ற ரீதியில் அவரால் சில விடயங்களைக் கையாள முடிகிறது.

ஆனால் பொலிஸ் படையைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் அவரிடம் இல்லாமை அவருக்குப் பெரும் சினமூட்டும் விடயமாகும். அவரின் தனிப்பட்ட பாதுகாப்புப் பிரிவாகிய சனாதிபதி பாதுகாப்புப்பிரிவு பொலிஸ் திணைக்களத்தின் கீழ் வருகின்றமை அவருக்குத் தனிப்பட்ட ரீதியில் சிரமங்களை ஏற்படுத்தியிருக்கிறது. அதாவது, அவரது பாதுகாப்புப் படையைச் சேர்ந்தோர் பொலிஸ் திணைக்களத்தின் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உள்ளாகக்கூடிய நிலைமைவுள்ளது. அண்மையில் கூட சனாதிபதித் தேர்தல் சமயத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தின் போது பிளாஸ்ரிக் கதிரைகளைத் திருடிச் சென்றனர் எனக்கூறி விசாரிக்கப்பட்டுள்ளனர் எனவும் அதனால் தமது பாதுகாப்பு அதிகாரிகள் அச்சுறுத்தப்படுவதாக சனாதிபதி சந்திரிகா குற்றம் சாட்டியிருக்கிறார். அதேவேளை கடந்த பொதுத் தேர்தலின் போது இடம்பெற்ற வன்முறை தொடர்பாக கைது செய்யப்பட்டு சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டிருப்பது சந்திரிகாவிற்கு சீற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. அதேவேளை அவரது மாமனார் ரத்வத்தவும் பொலிசாரின் பிடியிலேயே சிக்கியுள்ளார்.

இவ்வாறான நிலையில் தேசிய அரசொன்றை அமைக்க உள்த்துறை அமைச்சை சனாதிபதி சந்திரிகா கோருவார் என்றே எதிர்பார்க்கலாம்.

அதேவேளை தொடர்பு சாதன அமைச்சு மீது எப்பொழுதும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு கோபம் உண்டு. அது தன்னைப் பற்றிய அவதூறுப்பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருவதாக அவர் குற்றம் சாட்டி வருகிறார். இப்பொழுது இந்தியாவுக்குச் சென்றுள்ள அவர் மீண்டும் திரும்பியதும் தொடர்புசாதன அமைச்சைப் பொறுப் பேற்கக் கூடும் என ஊகங்கள் வெளியிடப் பட்டுள்ளன.

அத்துடன் தனது உரையை ஒளி பரப்பத் தமக்கு அரச தொலைக்காட்சியில் இடமொதுக்கித்தர மறுத்தமை தொடர்பாகவும் தொர்புசாதன அமைச்சு மீது அவர் கோபம் கொண்டுள்ளார். எனவே அவ் அமைச்சுப் பொறுப்பைக் கோரக்கூடும்.

ஆனால் அவ்விரு அமைச்சுகளையும் சனாதிபதியிடம் அல்லது பொ.ஐ.மு. விடம் வழங்குவது ஆட்சியை வழங்குவதற்குச் சமனானதாகும். பொ.ஐ.மு.வின் ஆட்சிக் காலத்தில் தேர்தல் சமயத்திலும் ஏனைய வேளைகளிலும் பொ.ஐ.மு. பொலிசாரை வன்முறைக்குப் பயன்படுத்தியமை வெளிப்படையான விடயமாகும். குறிப்பாக சனாதிபதி பாதுகாப்புப் பிரிவு ஒரு வன்முறைப் படையாகவே தொழிற்பட்டது.

அதே வேளை அரச தொலைக்காட்சி உள்ளிட்ட தொடர்புசாதனங்கள் ஐ.தே.க. வுக்கு எதிரான, குறிப்பாக ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான தனிப்பட்ட அவதூறுப் பிரசாரங்களை மேற்கொண்டன.

எனவே கூட்டரசாங்கம் என்பது பதவிப் பங்கீட்டுக்கு வரும் போது இவ்வாறான இடையூறுகள் ஏற்படும். இவற்றை வெற்றி கொள்ளல் இலகுவானதாக இராது.

ஜே.வி.பி - பொ.ஐ.மு கூட்டானது ஒரு தேர்தல் கூட்டென்பது வெளிப்படை. இக்கூட்டு ஏற்படுவதிலிருந்த சிக்கல்கள் பல நீங்கி விட்ட போதும் கூட்டு இறுதியாக்கப்படுவதில் சில முட்டுக்கட்டைகள் இன்னமும் உள்ளன. இந்தச் சிக்கல்களிலிருந்து விடுபட்டு வருகையில் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பான செய்திகள் வெளிவந்ததும் ஜே.வி.பி காரசாரமான கண்டனம் ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

இது ஒரு புறமிருக்க சனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க இந்தியாவிலிருந்து திரும்பியதும் தொடர்புசாதன அமைச்சைத் தம்வசம் எடுத்துக்கொள்வார் என பொதுசன ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அதேவேளை அமைச்சுப் பதவி எதுவாகிலும் பறிக்கப்பட்டாலோ அல்லது பாராளுமன்றம் கலைக்கப்பட்டாலோ,சட்ட நடவடிக்கையில் தாம் இறங்கப்போவதாக அமைச்சர் பீரிஸ் அறிவித்திருக்கிறார். இவையெல்லாம் தேசிய அரசாங்கம் ஒன்றைச் சாத்தியமற்றதாக்கியுள்ளது. எனறே கூறவேண்டும். எவ்வாறாயினும் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற சனாதிபதி சந்திரிக்கா மேற்கொள்ளும் காய்நகர்த்தலில் தேசிய அரசாங்கம் குறித்த நகர்வும் ஒன்றாகவே இருக்கும்.

# தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளை துரிதமாக விசாரிக்க நீதிபதிகளுக்கு பணிப்பு!

(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளை விசாரணை செய்வதற்கு சம்பந்தப்பட்ட சகல தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியம் என்று பிரதம நீதியரசர் சரத் என் சில்வா கேட்டுள்ளார்.

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகள் விசாரணை செய்வதில் கால தாமதம் ஏற்படுவதை தடுப்பதற்காகவே பிரதம நீதியரசர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ்வழக்குகளை துரிதமாக நடத்தி முடிக்குமாறு மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இன்று நடைபெறும்

(அலுவலக செய்தியாளர்)

மாந்தை கிழக்கு பிரதேச செயலகப்பிரிவின் 2003ஆம் ஆண்டிற்கான விளையாட்டுப் போட்டி நடைபெறவுள்ளது. மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டி இன்று பி. பகல் 2.30 மணிக்கு மு/பாண்டியன்குளம் மகாவித்தியாலய விளையாட்டுத்திடலில் நடைபெறவுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் ச.அ. ஜெறோம் தெரிவித்துள்ளார். (பா)

## பிச்சை எடுப்போருக்கு சமுர்த்தி!

பிச்சை எடுப்பவர்களுக்கு சமுர்த்தித் திட்டத்தின் கீழ் நிவாரணம் வழங்கப்படவுள்ளது. இதற்காக பிச்சை எடுப்பவர்களின் தொகையை கண்டறிவதற்காக பிரதேச செயலக மட்டத்தில் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு, வறுமை நிவாரண ஆணையாளர் திணைக் களத்தில் பதிவு செய்து வைக்கப்படவுள்ளது.

பிச்சைக்காரர்களுக்கு சமுர்த்தி நிவாரணமாக மாதாந்தம் 350 ரூபா, 600 ரூபா, 1000 ரூபா என்ற அடிப்படையில் வழங்கப்படும்.

# தேசிய மட்டத்திற்குத் தெரிவான மாணவர்களின் விபரம்

(அலுவலக செய்தியாளர்)

இரண்டாவது உலக இந்து மாநாட்டையொட்டி கிளி. மாவட்ட பள்ளி மாணவர்களுக்கிடையில் நடைபெற்ற பேச்சு, பண்ணிசைப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப்பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ள மாணவ மாணவிகளின் பெயர் விபரமும் பாடசாலைகளினது பெயர் விபரமும் பின்வருமாறு

**பேச்சுப்போட்டி**

கீழ்ப்பிரிவு :-

1ம்இடம் த.கேதாயினி முழங்காவில் ம.வி., 2 ம் இடம் ரூ. தாரணி முழங்காவில் ம.வி., 3 ம் இடம் த.விஜயதாரணி முழங்காவில் ம.வி.

மத்திய பிரிவு :-

1 ம் இடம் சிவராசா மயூரன் கிளி/இந்துக்கல்லூரி., 2 ம் இடம் அ.துஷ்யந்தி கிளி/இந்துக் கல்லூரி., 3ம் இடம் த.கீதரோகினி வட்டக்கச்சி ம.வி.

மேற்பிரிவு :-

1ம் இடம் மாணிக்கவாசகர் குருபரன் மத்திய கல்லூரி, 2ம் இடம் பொன்னம்பலம் ஜோதி வட்டக்கச்சி ம.வி., 3ம் இடம் கந்தசாமி ஆர்தி இராமநாதபுரம் ம.வி.

**பண்ணிசைப் போட்டி**

கீழ்ப் பிரிவு :-

1ம் இடம் மேனகா செல்லையா தீவு அ.த.க பள்ளி, 2ம் இடம் த.தனவக்சி வட்டக்கச்சி ம.வி., 3ம் இடம் ந. தனுசா வட்டக்கச்சி ம.வி.

மத்திய பிரிவு :-

1ம் இடம் இ.யாழினி இராமநாதபுரம் ம.வி., 2ம் இடம் தெ.அபிராமி வட்டக்கச்சி ம.வி., 3ம் இடம், சிவஞானம் நிதியா செல்லையா தீவு அ.த.க பள்ளி.

மேற்பிரிவு :-

1ம் இடம், கண்ணபிரான் சிந்துயா இராமநாதபுரம் ம.வி., 2 ம் இடம் பாலசுப்பிரமணியம் சயந்தினி வட்டக்கச்சி ம.வி., 3ம் இடம் வரதராசா தனரூபி வட்டக்கச்சி ம.வி. (சோ)

# சந்திரிகாவின் இந்திய விஜயம்

## புலிகளுக்கு எதிரான ஓர் இணைப்பு!

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு முன்னோடியாக இம்மாதம் 14ஆம் திகதி அமெரிக்காவில் நடைபெறவுள்ள கூட்டத்திற்கான ஆரவாரத்தில் சிறிலங்கா ஆளும் ஐ.தே. முன்னணி அரசாங்கம் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் - சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தியோகபூர்வ நான்குநாள் விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியா சென்றுள்ளார்.

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளிநாடொன்றிற்குப் பயணம் செய்வதொன்றும் பெரியதொரு விடயம் அல்ல, அதேபோன்று அவர் உத்தியோகபூர்வ விஜயம் எனக் கூறிக் கொண்டு தனிப்பட்டதேவைக்களைப் பார்ப்பதும் தனிப்பட்ட விஜயமெனக் கூறிக் கொண்டு உத்தியோகபூர்வ கடமைகளைப்பார்ப்ப தென்பதும் புதியதல்ல.

ஆகையினால், சனாதிபதி சந்திரிகாவின் இந்திய விஜயம் ஒன்றும் ஆச்சரியத்திற்குரிய விடயம் அல்ல ஆயினும் இன்றைய அரசியற் சூழ்நிலையில் சனாதிபதி சந்திரிகாவின் இந்திய விஜயமானது வழமையான விஜயம் என்பது போல் கொள்ளத்தக்கதல்ல. அதிலும், தமது ஆலோசகரும், முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருடனும் அவர் செல்வது முக்கியத்துவம் மிக்கதொன்றே.

சனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்து, அவர் இன்று இரண்டுங்கெட்டான் நிலையில் உள்ளார் போன்றே தெரிகின்றது. அதாவது ஒருபுறத்தில் அவர் சமாதானப் பேச்சுவார்த்தைக்கும் ஆதரவு தெரிவிப்பவராகவுள்ளார். அதேவேளை, யுத்த நிறுத்தத்திற்கும், சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு எதிரான சக்திகளுடனும் தனது உறவையும்/நெருக்கத்தையும் வளர்த்தெடுத்துக் கொள்வதில் அக்கறை கொண்டவராகவுமுள்ளார்.

இனப்பிரச்சினை தொடர்பாகவும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாகவும் சனாதிபதி சந்திரிகாவின் தற்போதைய வெளிப்படையான நிலைப்பாடானது சமாதான முயற்சிகளுக்குத் தான் எதிரானவர் அல்ல என்பதே ஆகும். அதாவது இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாண வேண்டும் என்பதும், அதற்குத் தமது ஆதரவு உண்டு என்பதும் ஆகும்.

ஆனால், சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவித்து வரும் அவர், தனது அரசியல் கூட்டாளிகளாகச் சமாதான முயற்சிகளுக்கு எதிரானவர்களையும், யுத்த ஆதரவாளர்களையுமே கொண்டுள்ளார்.

உள்நாட்டைப் பொறுத்தமட்டில் ஜே.வி.பி.யே இன்று சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நட்புச் சக்தியாகும். ஜே.வி.பி.யுடன் புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றைச் செய்துகொள்வதற்காக சனாதிபதி தலைமையிலான சுதந்திரக் கட்சி பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை ஜே.வி.பி.யுடன் நடாத்தியுள்ளது.

இதுவரையில் இவ்விரு தரப்பிற்கும் இடையில் புரிந்துணர்வு உடன்பாடு எட்டப்படாமைக்கு, இனப்பிரச்சினை தொடர்பாக இரு தரப்பினரும் இணக்கப்பாடு ஒன்றிற்கு வரமுடியாது போயுள்ளமையே காரணமாகும். அதாவது ஜே.வி.பி. இனப்பிரச்சினைக்கு முழு அளவிலான இராணுவத்தீர்வை வலியுறுத்திவரும் அதேவேளை, சுதந்திரக்கட்சி வெளிப்படையாக அத்தகையதொரு நிலைப்பாட்டிற்குச் செல்லமுடியாதிருப்பதே காரணமாகும். அதாவது அவ்வாறான நிலைப்பாட்டிற்குச் செல்வதென்பது, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சமாதானத்திற்கு ஆதரவு என்ற நிலைப்பாட்டிற்கு மாறானதாகிவிடும்.

இது ஒருபுறம் இருக்க, வெளியுலகிற்குத் தன்னை சமாதான ஆர்வலராகக் காட்டிக்கொள்ள சனாதிபதி சந்திரிகா முயன்றுவரினும், சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் அனுசரணையாளர்களாகச் செயற்படுபவர்களுடன் அவர் ஓர் அனுசரித்த போக்கையோ அன்றி ஆதரவான செயற்பாட்டையோ வெளிக்காட்டியதாகத்தெரியவில்லை.

அவர் முற்பட்டு நிற்பதையே வெளிக்காட்டுவதாயுள்ளது.

அடுத்ததாக, டில்லி சென்றுள்ள அவர், இந்தியத் தலைவர்களைச் சந்தித்துப் பேசவுள்ளார். இச்சந்திப்பானது பல தரப்பட்ட விடயங்களாக இருக்கும் என உத்தியோகபூர்வ அறிவிப்புக்கள் தெரிவிக்கின்றபோதும் இதில் பெரும்பாலும் சமாதானப் பேச்சுவார்த்தை குறித்ததாகவே இருக்கும் என இராஜதந்திர வட்டாரங் களில் எதிர் பார்க்கப்படுகின்றது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், இந்திய அரசாங்கமும் இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சிகள் குறித்த விடயத்தில் ஒரே நிலையில் உள்ளார்கள் என்றே கூறலாம். அதாவது, இரு தரப்பும் சமாதான முயற்சிகள் தொடர்பான விடயத்தில் இரு வகை நிலைப்பாட்டைக் கொண்டவை. ஒருபுறத்தில் இரு தரப்பினருமே சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு அளிப்பதாகத் தெரிவித்து வருகின்ற அதேவேளை. இனப்பிரச்சினை யானது சர்வ தேச ரீதியில் பெற்றுவரும் முக்கியத்துவத்தினையும், விடுதலைப் புலிகள் பெற்றுவரும் அங்கீ காரத்தினையும் விரும்பவில்லை. ஒரு வகையில் எதிர்த்து வருகின்றனர் என்றே கூறலாம்.

மாக, இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான சந்திப்புக்கள், பேச்சுவார்த்தைகள், மாநாடுகள் என்பனவற்றில் பங்களிக்காது உள்ளது. தற்பொழுதுகூட அமெரிக்காவில் நடைபெறவுள்ள சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் மாநாட்டிற்கு முன்னோடியான கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அமெரிக்கா கோரிக்கை விடுத்துள்ள போதும் இந்திய அரசு இது குறித்து தீர்மானம் எதையும் இதுவரையில் எடுக்கவில்லை. இதேவேளை, இம் மாநாட்டில் அமெரிக்காவைத் திருப்திப் படுத்தும்வகையில் இந்தியா கலந்து கொள்ளவும் கூடும்

எதுவாயினும் சனாதிபதி சந்திரிகாவின் இந்திய விஜயமானது, இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில் மிகவும் முக்கியத்துவம் பெற்றதாகவே இருக்கும். அதாவது, சனாதிபதி சந்திரிகாவும், இந்திய அரசும் இவ்விடயத்தில் தமது செயற்பாடுகள் குறித்து சில முக்கிய தீர்மானங்களை மேற்கொள்ள வாய்ப்புள்ளது.

ஏனெனில், இனப்பிரச்சினை விவகாரமானது இன்று சந்திரிகா குமாரதுங்கவினதும், இந்திய அரசினதும் கைகளை மீறியதொன்றாகச் சென்றுவிட்டது. ஆகையினால், இவ்விவகாரம் தொடர்பாக இந்தியாவின் ஆலோசனையுடன் சந்திரிகா குமாரதுங்கவோ அன்றி சந்திரிகா குமாரதுங்கவின் ஆலோசனையுடன் இந்திய அரசோ சில தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடும்.

அதிலும் குறிப்பாக, யூன் மாதத்தில் ஜப்பானில் நடைபெறவுள்ள சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு நடைபெறுவதற்கு முன்பாக ஐ.தே. முன்னணி அரசாங்கம் குறித்துச் சில தீர்மானங்களை மேற்கொள்ள சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விருப்பம் கொண்டவராக இருக்கையில், அவரின் தற்போதைய விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது.

சமாதான முயற்சிகளுக்கு ஏற்பாட்டாளராகச் செயற்படும் நோர்வே அரசை அவர் கடுமையாக விமர்சித்துள்ள அதே




வேளை, தற்பொழுது இனப்பிரச்சினை விவகாரத்தில் அக்கறை காட்டும் ஜப்பான் அரசையும் விமர்சித்துள்ளார். இவ்விடயத்தில் சந்திரிகாவின் ஆலோசகர் கதிர்காமர் கடும் சீற்றம் கொள்பவராகவே காணப்படுகின்றார். இறுதியாக விடுதலைப்புலிகள் விடயத்தில் அமெரிக்கா இரட்டை வேடம் போடுவதாகவும் சனாதிபதி சந்திரிகா குற்றம் சாட்டியதாகத் தகவல்கள் கூறுகின்றன.

அதாவது, சமாதான முயற்சிகளுக்கு சர்வதேச ரீதியில் கிடைக்கப்பெறும் ஆதரவு குறித்து சந்திரிகா குமாரதுங்க மகிழ்ச்சியடைந்துள்ளதாக இல்லை. சமாதான முயற்சிகளுக்குக் கிடைக்கும் ஆதரவை விடுதலைப்புலிகளுக்கும் கிடைக்கும் அங்கீகாரமாகவும், வாய்ப்பாகவுமே அவரால் நோக்கப்படுகின்றது.

இதேவேளை, இனப்பிரச்சினைக்கு சர்வதேச ரீதியிலான மத்தியஸ்துவத்துடன் தீர்வு காண்பதான விடயத்தில் பூரண திருப்தி கொள்ளாத - விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் தனிப்பட்ட ரீதியிலோ அன்றி அரசு என்ற ரீதியிலோ முரண்பாடு கொண்டுள்ள சக்திகளுடன் உறவுகளை வளர்த்துக் கொள்வதிலேயே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அக்கறை காட்டி வருகின்றார்.

இந்த வகையிலேயே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இந்திய விஜயம் நோக்கப்படவேண்டியதாகவுள்ளது. இந்தியாவிற்கு நான்கு நாள் விஜயம் ஒன்றை நேற்று முன்தினம் தொடங்கிய அவர் முதலில் தமிழ்நாட்டுக்குச் சென்று அங்கு முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா விடுதலைப் புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டவர் என்பது வெளிப்படையானதொன்று. அவரைச் சனாதிபதி சந்திரிகா தமது விருப்பின் பேரில் சந்தித்துப் பேசியமையானது விடுதலைப்புலிகளுக்கு எதிரான சக்திகளுடன் நெருக்கமான உறவைப்பேண



இந்தியாவும், சந்திரிகா குமாரதுங்கவும் இத்தகையதொரு நிலைப்பாட்டையே கொண்டுள்ளனர் என்பதற்கு சமாதான முயற்சிகளுக்குப் பேச்சளவிலான ஆதரவை மட்டுமே இவை வழங்கிவருவதோடு, இச்சமாதான முயற்சிகளுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையிலான செயற்பாட்டினை அவை மேற்கொண்டதையும் சுட்டிக்காட்டமுடியும்.

எடுத்துக்காட்டாக, கடந்த மாதம் விடுதலைப் புலிகளின் கப்பல் ஒன்று சர்வதேச கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையால் மூழ்கடிக்கப்பட்டமைக்கு பின்னணியில் இவ்விரு தரப்பும் இருந்தது என்பதற்கான ஆதாரங்களே பெருமளவில் உள்ளன. அதாவது இந்தியா கொடுத்த தகவலின் அடிப்படையில் சனாதிபதியின் பணிப்பின் கீழ் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.

மேலும், இந்தியத் தரப்பு விடுதலைப்புலிகளுடனான முரண்பாடு காரண

இதில் முதன்மையாக, சிறிலங்காவில் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்படுமானால், இந்தியாவின் உணர்வுகள் எத்தகையதாக இருக்கும் என்பதை சனாதிபதி சந்திரிகா அறிந்து கொள்ள ஆர்வம் காட்டக்கூடும்.

ஆகையினால், சனாதிபதி சந்திரிகாவினது இந்திய விஜயமானது - சிறிலங்கா அரசியல் தொடர்பாகவும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாகவும் அவர் சில முக்கிய முடிவுகளை மேற்கொள்வதற்கானதொன்றாக இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகமுண்டு. ஒத்த கருத்துடைய இரு தரப்பினர் கலந்துபேசித் தீர்மானம் எடுக்க முனைவது எதிர்பார்க்கக்கூடியதொன்றே.

**ஜெயராஜ்**

# தியாக தீபம் திலீபன் மருத்துவ நிலையம் புளியங்குளத்தில் விரைவில் இயங்க ஏற்பாடு

## – தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்

(அலுவலக செய்தியாளர்)

**வவுனியா வடக்குப் பிரதேசமான புளியங்குளத்தில் தியாக தீபம் திலீபன் மருத்துவ நிலையமொன்று இம்மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்க முடிவாகியுள்ளது. இத்தகவலைத் தமிழீழ சுகாதார சேவைப் பணிப்பாளர் அருணன் தெரிவித்தார்.**

அவர் மேலும் கூறுகையில், தற்போது மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்து வருகின்றனர். இதனால் அப்பகுதி மக்கள் நீண்ட தூரம் சென்றே சிகிச்சை பெற்றுவருகின்றனர். சிலர் போக்குவரத்துப் பிரச்சினை காரணமாகவும் சிகிச்சை பெற முடியாதுள்ளனர். இதனால் மக்கள் நோய்த் தொற்றுக்கு இலக்காகியும் உள்ளனர்.

இதனைக் கருத்திற்கொண்டே அவ்விடத்தில் திலீபன் மருத்துவ சேவை நிலையத்தை நடாத்த முடிவு செய்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, புளியங்குளம் பகுதியில் இராணுவ நடவடிக்கைக்கு முன்னர் அரச வைத்திய சாலை ஒன்று இயங்கி வந்தது. இதுவரை அவ்வைத்தியசாலையினை மீண்டும் இயங்க வைப்பதற்கு நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் இதுவரை புனரமைப்பு வேலைகள் நடைபெறவில்லை என்பதும் தெரிந்ததே. (அ)

# தகவல் தொழில்நுட்பப் பாடத்திட்டத்தை கட்டாயமாக்கும் முயற்சி தோல்வி !

## – விருப்பத்திற்குரிய பாடமாக அறிமுகம்

(கொழும்பு)

2004ஆம் ஆண்டு முதல் கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சையில் தகவல் தொழில் நுட்பத்துறை விருப்புக்குரிய பாடமாக அறிமுகப்படுத்தப்பட வுள்ளது.

தகவல் தொழில் நுட்பத்தைச் சாதாரண தரப் பரீட்சையில் கட்டாய பாடமாக்குவதற்கு கல்வி அமைச்சின் அதிகாரிகள் முயற்சித்த போதும் நாடெங்கிலும் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் கணினி வசதிகள் இல்லாததால் இந்த புதிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகக் கல்வி அமைச்சு தெரிவிக்கின்றது.

தகவல் தொழில்நுட்பத்தைப் பாடமாகக் கற்பிப்பதற்காக அடுத்த ஆண்டு இறுதிக்குள் பாடசாலைகளில் 1200 தகவல் தொழில் நுட்ப நிலையங்கள் அமைக்கப்பட வுள்ளன.

பத்தாம், பதினோராம் தரங்களில் தகவல் தொழில் நுட்பத்தை ஒரு பாடமாக அறிமுகப்படுத்த கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக எண்பது பாடசாலைகளைத் தெரிவு செய்து ஆரம்பத் திட்டங்களை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தேசிய கல்வி நிறுவனம் அறிவித்துள்ளது.

பாடசாலைகளில் தகவல் தொழில்நுட்பத்தை கற்பிப்பதற்கு சுமார் பன்னிரெண்டாயிரம் ஆசிரியர்கள் தேவைப்படுவதாகவும் இதுவரை தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் சிலருக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# பொது வைத்தியசாலை நிலைமைகளால் விசனம்!

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் அடிப்படை வசதிகள் குறித்து பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இந்த வைத்தியசாலையில் ஏறத்தாழ நாநூறு நோயாளிகள் தங்கிச் சிகிச்சை பெறுகின்ற போதிலும் அவர்களில் நூற்றி ஐம்பது பேருக்கே படுக்கை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது.

இந்த மருத்துவ மனையில் இருக்கின்ற அவசர சிகிச்சைப் பிரிவு நீண்ட காலமாக மூடப்பட்டுள்ளது. அங்குள்ள மூன்று நோயாளர் காவுவண்டிகளும் பழுதடைந்துள்ளன. அத்துடன், வைத்தியர், தாதியர், சிற்றூழியர் பற்றாக்குறையும் நிலவுகின்றது.

## தடகளப் போட்டிகள்

(அலுவலக செய்தியாளர்)

துணுக்காய் வலயமட்டப் பாடசாலைகளுக்கான வலயமட்டத் தடகளப்போட்டிகள் நேற்று முன் தினம் காலை ஆரம்பமானது.

இந்நிகழ்வு துணுக்காய் வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் வ.சந்திரபாலன் தலைமையில் ஆரம்பமானது. மங்கல விளக்கினை பிரதிக் கல்விப் பணிப்பாளர் சுபரந்தாமன் ஏற்றிவைத்தார். தேசியக்கொடியினை துணுக்காய் வலயக் கல்விக்கழகப் பொறுப்பாளர் தாயகன் ஏற்றிவைக்க, துணுக்காய் வலயக் கொடியினை வலயக் கல்விப் பணிப்பாளர் மா.தேவேந்திரன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து போட்டிகள் இடம்பெற்றன. (பா)



பத்தாவது தேசிய கல்வியியற்கல்லூரிகளுக்கிடையேயான பெருவிளையாட்டுப் போட்டியில் சம்பியனாகிய வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரியின் அணித்தலைவர், வவுனியா பிரதி திட்டமிடல் பணிப்பாளர் பரமகுலசிங்கம் அவர்களிடமிருந்து வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொள்வதனையும், பீடாதிபதி க.பேர்னாட் உரை யாற்றுவதனையும் படங்களில் காணலாம்.

படப்பிடிப்பு: ஆ. சுபாஸ்கரன் (வவுனியா செய்தியாளர்)

## சமூகம் தரவும்

மல்லாவி மத்திய கல்லூரியில் 2002இல் மாகாண கல்வித் திணைக்களத்தின் ஆரம்ப கணித செயற்திட்டப் பிரிவினரால் நடாத்தப்பட்ட ஆறுநாள் வதிவிடப் பயிற்சியில் பங்குபற்றிய அனைத்து ஆசிரியர்களையும் மீளாய்விற்காக எதிர்வரும் 11ஆம் திகதி காலை 9.00 மணிக்கு மல்லாவி மத்திய கல்லூரிக்குச் சமூகமளிக்குமாறு பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம். கேட்டுள்ளார். (பா)

# சுகாதார சீர்கேட்டைத் தடுக்க நடவடிக்கை இல்லையா?

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி பொதுச்சந்தை வளாகத்திலுள்ள இடிந்த கிணற்றினுள் குப்பை கூழங்கள் நிறைந்து காணப்படுகின்றன.



இக்கிணற்றிற்கருகாமையில் வர்த்தக நிலையங்களும் இயங்கி வருகின்றன.

இக் கிணற்றினைத் தற்போது மூடாது விடில் வரும் சித்திரை மாத மழையின் போது இக்கிணற்றுக்குழியினுள் நீர் தேங்கி நின்று குப்பை கூழங்களுடன் சுகாதார சீர்கேட்டினை உருவாக்கும் அவல நிலை ஏற்படவுள்ளதென இதனையண்டிய பகுதியிலுள்ள வியாபார நிலையத்தினர் கவலை தெரிவித்துள்ளனர். (சோ)

## – கரைச்சி பி.செ.பிரிவு –

# கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டிகள்

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங் களுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டிகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. எதிர்வரும் 10ஆம், 11ஆம் திகதிகளில் கிளிநொச்சி பொதுவிளையாட்டு மைதானத்தில் காலை 7.00 மணிக்கு போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன.

எனவே கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களின் வீர வீராங்கனைகளை உரிய நேரத்திற்கு வருகை தந்து போட்டிகளில் கலந்துகொள்ளுமாறு கரைச்சிப் பிரதேச செயலர் பொன் நித்தியானந்தன் கேட்டுக்கொண்டுள்ளார். (சோ.லோ)

# உதைபந்தாட்டப் போட்டியில் கிளி. தெரிவு அணி வென்றது

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட தெரிவு அணிக்கும், வவுனியா மாவட்ட தெரிவு அணிக்கும் இடையில் உதைபந்தாட்டப் போட்டி ஒன்று கடந்த ஞாயிறன்று வவுனியாவில் நடைபெற்றது.

வவுனியா யூசி விளையாட்டு மைதானத்தில் மாலை 4.00 மணிக்கு வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலனுக்கு வீரர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டு போட்டி ஆரம்பமானது.

தொடர்ந்து போட்டியில் கிளிநொச்சித் தெரிவு அணி 3-1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

கிளி/தெரிவு அணியின் முன்னணி வீரரான ப.ஜெயந்தன் ஒரு கோல் போட்டதையடுத்து வவுனியா தெரிவு அணிவீரர் தவக்குமார் கோல் ஒன்றைப் போட்டார். அதனை அடுத்து விறுவிறுப்பாகப் போட்டி நடைபெற்றது.

இடைவேளைக்குப் பிற்பாடு கிளி/தெரிவு அணிவீரர் றமேஸ் ஒரு கோலைப் போட்டு இரண்டுக்கு ஒன்று என்ற நிலை உருவானது. எதிர் அணியின் தவறான ஆட்டம் காரணமாக தண்ட உதை மூலம் கிளி/தெரிவு அணி மேலும் ஒரு கோலைப் போட்டு வெற்றியீட்டியது. (அ)

## ஆராய்வுக் கூட்டம்

(உடையார்கட்டு)

உடையார்கட்டு குளத்தின் கீழான (2003) சிறுபோக பயிர்ச்செய்கையின் போது விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், நீர் விநியோகத்தில் ஏற்படும் இடையூறுகளைத் தவிர்க்கும் விடயம். இக்காலப் பகுதியில் செய்கைக்கான நிலப்பரப்பு போன்றவை தொடர்பாக விரிவாக ஆராயும் கூட்டம் அண்மையில் இடம் பெற்றது. (19)



**சிந்தனைக்கு**

சிங்களப் பேரினவாதத்தின் தீவிரவாதப் போக்கில் மாற்றம் ஏற்படும் என நான் என்றுமே நம்பியதில்லை. அந்த மாற்றம் ஏற்படாதவரை தமிழருக்கு நீதி கிட்டப்போவதில்லை.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM
யாழ். சாலை, கிளிநொச்சி. 09-04-2003

## பங்களிப்புத் தேவை

"நாங்கள் இந்தியாவை ஒரு நேச சக்தியாகவே பார்க்கின்றோம். பழைய நிகழ்வுகள், பகைமை உணர்வுகள், யுத்தங்கள் என்பனவற்றை மறந்து இந்தியா எமது மக்களின் நலனுக்காக விடுதலைப் புலிகளுடன் நட்புறவை வளர்க்க வேண்டும். இந்தப் பிரச்சினையில் அவர்களும் பங்கு கொண்டு ஒரு நியாயமான தீர்வைத் தரவேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கம்" என்ற விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் கூற்றுக்கள். இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா எவ்வாறும் புறந்தள்ளப்பட்டுவிடவில்லை என்பதை மட்டுமல்ல, புறந்தள்ளக்கூடிய சக்தி அல்ல என்பதனையே வெளிக்காட்டியுள்ளது.

இனப்பிரச்சினை விவகாரமானது இன்று சர்வதேச முக்கியத்துவம் பெற்றதொன்றாகியுள்ளது. உலக வல்லரசுகள் இவ்விடயத்தில் தலையிட்டு தீர்வு முயற்சிகளுக்குத் தமது ஒத்துழைப்பையும், அனுசரணையையும் வழங்கும் அளவிற்கு பிரச்சினை சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ளது. பொருளாதார வல்லரசான ஜப்பான், வலுமிக்க வல்லரசான அமெரிக்கா என்பன கூட பெரும் அக்கறை கொண்டுள்ளன.

ஆனால், இவ்விவகாரத்தில் தென்னாசியாவின் பிராந்திய வல்லரசும், இலங்கையின் அண்டை நாடுமான இந்திய அரசு ஒரு வகையில் ஒதுங்கிக்கொண்டமை போன்றதொரு நிலைப்பாட்டையே கைக்கொண்டு வருகின்றது. அத்தோடு, விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்ந்தும் முரண்பாடானதொரு போக்கையே கைக்கொண்டு வருகின்றது.

இலங்கை இனப்பிரச்சினையில் தலையிட்டு இந்திய அரசு தனது கைகளைச் சுட்டுக் கொண்டது என்பது என்னவோ உண்மைதான். ஆனால், அது தமிழ் மக்களினதோ அன்றி விடுதலைப் புலிகளினதோ தவறாகமாட்டாது. இந்தியாவின், தவறான அணுகுமுறையைக் கைக்கொண்டதினால் நேர்ந்த விளைவு அது. சமாதானம் பேண வந்த இந்திய இராணுவம் தமிழ் மக்களுக்கும் அவர்களின் அங்கமான விடுதலைப் புலிகளுக்கும் அடித்தபோது தமிழ் மக்கள் திருப்பி அடிக்கத் தொடங்கினர். உரிமைக்காகப் போராடிக் கொண்டிருந்த இனத்தின் மீது அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டபோது அது திருப்பி அடித்ததில் ஆச்சரியம் கொள்வதற்கு என்ன இருக்கின்றது.

ஆகையினால், அடித்தபோது திருப்பி அடித்தமையும், அது தொடர்பாகப் பின்னர் நிகழ்ந்த துயரமான சம்பவங்களும் இந்தியாவின் அன்றைய தவறான முடிவுகளினால் விளைந்தவை. ஆனால், இன்று அவ்வாறானதொரு நிலை இல்லை. அது கடந்த கால வரலாறாகிவிட்டது. ஆனால், இன்று இனப்பிரச்சினைத் தீர்விற்கு நேர்மையான வகையில் இந்தியாவின் ஒத்துழைப்பு கோரப்படுகின்றது.

இதேவேளை, இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் விடுதலைப் புலிகள் மட்டும் இந்தியாவின் ஒத்துழைப்பைக் கோரவில்லை. சமாதான முயற்சிகளில் ஈடுபாடு காட்டும் மேற்குலகம் உட்பட, அனைவருமே இந்தியாவின் பங்களிப்பைக் கோரியே வருகின்றன. எடுத்துக் காட்டாகச் சமாதான முயற்சிகளில் ஏற்பாட்டாளராகப் பணியாற்றிவரும் நோர்வே அரசு இந்திய அரசிற்குச் சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் குறித்து தொடர்ச்சியாக எடுத்து விளக்கி வருகின்றமை கூட அதற்காகவே.

அமெரிக்க அரசு கூட சிறீலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற்கு முன்னோடியாக வாஷிங்டனில் கூட்டவுள்ள கூட்டத்திற்கு இந்தியாவிற்கு அழைப்பு விடுத்துள்ளமையானது இதன் அடிப்படையிலானதே ஆகும். அதாவது இந்தியாவும் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் பங்காற்றவேண்டியுள்ளது என்பதினாலேயே ஆகும்.

இவ்வாறாக நிலைமை இருக்கையில், கடந்த கால மனக்கசப்புக்களைக் கொண்டு இந்தியா ஒதுங்கிக் கொள்வதனால் பயன் ஏதும் கிட்டிவிட முடியாது. ஏனெனில், இராஜதந்திர உலகில் பழைய பகைமைகள், கசப்புணர்வுகள் எல்லாம் அர்த்தமற்றவை, கேடுவிளைவிப்பவை, தேசத்தின் நலன்களிற்கு விரோதமானவை.

ஆகையினால், இந்திய அரசு கடந்தகால கசப்பான அனுபவங்களை மறந்து இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சிகளில் பங்காற்ற முன்வர வேண்டும். உலகில் கடந்த காலத்தில் போரிட்ட நாடுகள் – விரோதத்தைக் கொண்ட நாடுகள் யாவுமே தொடர்ந்தும் அதே நிலையைக் கடைப்பிடிப்பதாக இருந்தால் இன்றைய உலகில் நட்பு சக்திகள், நட்பு நாடுகள் என்பனவற்றைக் கண்டுகொள்ளக் கூடியதாக இருக்கமாட்டாது. உலகில் அமைதி என்பது சாத்தியமான தொன்றாக இருக்கமாட்டாது.

# இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களை மேம்படுத்த சுவீடன் 300 கோடி ரூபா உதவி

### சமாதான முயற்சிகளை முன்னெடுக்கவும் உறுதி

(கொழும்பு)

இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களை மேம்படுத்த சுவீடன் 300 கோடி ரூபாவை வழங்கி வருகின்றது. இத்திட்டங்கள் அடுத்த இரண்டு வருடங்களில் அமுல் செய்யப்படும்.

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்கப்போவதாக சுவீடன் தெரிவித்துள்ளது. இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் சுவீடன் பிரதி நிதிகள் உள்ளார்கள். அவர்கள் தொடர்ந்தும் அந்த இயக்கத்தில் இணைந்திருப்பார்கள் என்று சுவீடன் வெளிவிவகார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் திருமதி ஈவா வோல்டோ புறுண்டின் தெரிவித்தார். போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் பணிகளை மேலும் விஸ்திரிக்க உதவப் போவதாகவும் அவர் உறுதியளித்தார். இருதரப்பு அபிவிருத்தி ஒத்துழைப்புத் தொடர்பான உடன்படிக்கை நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டது. புதிய அணுகுமுறை இலங்கையின் சமாதானம், ஜனநாயகம், மனித உரிமைகள், பொருளாதார அபிவிருத்தியின் ஊக்குவிப்பு என்பனவற்றை கருத்திற்கொண்டு அமைந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின் தங்கிய பிரதேசங்களுக்கு போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொடுப்பது, போர் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வது போன்றனவும் இதில் அடங்கும்.

உடன்படிக்கை கைச்சாத்திடல் வைபவத்தில் நிதி அமைச்சர் கே. என். சொக்ஸி கலந்து கொண்டார்.

## தமிழ்க் கூட்டமைப்பினர் இன்று யாழ்ப்பாணம் செல்கின்றனர்

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்று யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

யாழ்.மாநகர சபை மைதானத்தில் சிறிலங்காப் படையினர் படைமுகாம் அமைக்கும் நடவடிக்கைகளை தடுப்பது குறித்து ஆராயவும், அது தொடர்பான மாற்று ஏற்பாடுகள் குறித்து கலந்தாலோசிப்பதற்குமே இவர்கள் யாழ். குடாநாட்டுக்கு விஜயம் செய்கின்றனர்.

இவர்களும் சிறிலங்கா படைத்தளபதி லயனல் பலகல்லவும், படையதிகாரிகளும் செல்லவுள்ளனர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, ரவிராஜ், அப்பாத்துரை விநாயகமூர்த்தி, சிவாஜிலிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் யாழ்ப்பாணத்தில் படையதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

## அமெ. விமானம் வீழ்ந்தது!

(பாக்தாத்)

அமெரிக்காவின் ஏ-10 ரக யுத்த விமானமொன்று பாக்தாத்தில் நேற்று வீழ்ந்து நொறுங்கியுள்ளது.

அமெரிக்கப் படையினரின் ஆட்லறித் தாக்குதல் காரணமாகவே இவ் விமானம் பாக்தாத் விமான நிலையத்தில் வீழ்ந்து நொறுங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## 60 இந்திய ஆசிரியர்கள் மலையகத்திற்கு அழைப்பு

(கண்டி)

மலையக பாடசாலைகளில் கல்வி கற்பிப்பதற்காக இந்தியாவில் இருந்து அறுபது ஆசிரியர்கள் அழைத்து வரப்படவுள்ளனர்.

இன்னும் ஒரு சில வாரங்களில் இலங்கை வரும் இந்த ஆசிரியர்களுக்கான ஊதியத்தினை இந்திய அரசு வழங்கவுள்ளது.

இந்த ஆசிரியர்கள் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களை போதிக்கவுள்ளனர்.

## நியாப் அறிமுகக் கூட்டங்கள்

வடக்கு - கிழக்கு, நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் கீழ் கண்டாவளைப் பிரதேசத்தில் 2003ஆம் ஆண்டு புனரமைப்புச் செய்யப்படவுள்ள கிராமங்களுக்கான ஆரம்ப ஆய்வு தொடர்பான அறிமுகக் கூட்டம் எதிர்வரும் 10,11 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

10ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு பிரமந்தனாறு பகுதிக்கு பிரமந்தனாறு ம.வியிலும், மு.ப.11.30 மணிக்கு மயில்வாகனபுரம் பகுதிக்கு மயில்வாகனபுரம் பாடசாலையிலும், பி.ப.2.30 மணிக்கு பெரியகுளம் பகுதிக்கு ஐயனார் வித்தியாலயத்திலும் மறுநாள் மு.ப.9.30 மணிக்கு ஊரியான் பகுதிக்கு கிளி முருகானந்தா ம.வியிலும், மு.ப.11.30 மணிக்கு தருமபுரம் மேற்கு பகுதிக்கு, கண்டாவளை K.N.D.O மண்டபத்திலும், பி.ப.2..00 மணிக்கு உழவனூர் பகுதிக்கு உழவனூர் முன்பள்ளியிலும் ஆரம்ப ஆய்வுக்கூட்டம் நடைபெறவுள்ளது. (14)

## எலிகளால் பரவும் நோய் அபாயம்!

(கொழும்பு)

ஹோமாகமப் பகுதியில் எலிகளில் இருந்து பரவும் புதிய காய்ச்சல் ஒன்று பரவிவருகிறது என சுகாதார அமைச்சு தெரிவிக்கிறது.

கடந்த மூன்று மாதங்களில் 70 பேர் இந்தக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இந்த நோய் மேலும் பரவாமல் இருப்பதற்கு பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் கருத்தரங்குகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகின்றது.

## குவைத் தூதரகத்தில் தஞ்சமடைந்த இலங்கையர் நாடு திரும்ப ஏற்பாடு

(கொழும்பு)

குவைத்திலிருந்து ஒரு தொகுதி இலங்கையர்கள் அடுத்த சில தினங்களில் நாடு திரும்பவுள்ளனர். இதற்கான நடவடிக்கையில் குவைத்திலுள்ள சிறிலங்கா தூதரகம் ஈடுபட்டுள்ளது.

குவைத்திலுள்ள தூதரகத்தில் ஈராக் யுத்த நெருக்கடிகளையடுத்து ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் தஞ்சமடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இவர்களை அடுத்த சில தினங்களில் தாயகம் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, குவைத்தில் பெரியளவில் நெருக்கடியெதுவும் ஏற்பட்டு விடவில்லை எனவும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

## பாராளுமன்றத்தைக் கலைக்க முயன்றால் அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்கும்!

### - அமைச்சரவைப் பேச்சாளர் பீரிஸ்

(கொழும்பு)

பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு அல்லது அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்பதற்கு சனாதிபதி நடவடிக்கை எடுத்தால் அந்த நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் சட்டரீதியாக எதிர் நடவடிக்கை எடுக்கும் என்பதை அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சனநாயக ரீதியில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அமைப்புக்கு எதிராக சனநாயக முறையற்ற, சட்ட நீதியற்ற நடவடிக்கைகளை எவராவது எடுத்தால் அதனை அரசு சட்டரீதியாக முறியடிக்கும் என்றும், கோட்டை மாநகர சபையை மேல் மாகாணசபை முதல்வர் கலைத்தது தவறு என்று நாம் சுட்டிக்காட்டினோம். மேன்முறையீட்டு நீதிமன்றமும் எமது நிலைப்பாட்டை உறுதிசெய்துள்ளது.

எதிர்காலத்தில் எவராவது சட்டரீதியற்ற, சனநாயக முறையற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டால், அரசாங்கம் முழுப்பலத்தையும பிரயோகித்து சட்ட நடவடிக்கை எடுக்கும் என்றும் பேராசிரியர் பீரிஸ் மேலும் கூறியுள்ளார்.

# பாக்தாத்தில் சதாமின் மாளிகை மீது 2000 இறாத்தல் குண்டுகளை அமெ. வீசியது!

## பல பொதுமக்கள் பலி;கட்டடங்கள் தரைமட்டம்

(பாக்தாத்)

பாக்தாத்தில் உள்ள சதாம் ஹுசைனின் மாளிகைமீது



குண்டு வீச்சை மேற்கொண்ட விமானம்

அமெரிக்க குண்டுவீச்சு விமானங்கள் 2000 இறாத்தல் (900 கிலோ) நிறைகொண்ட குண்டுகளை நேற்று வீசியுள்ளன.

சதாமும் அவரது மகன்மாரும் இந்த மாளிகையில் தங்கியிருப்பதாகக் கிடைத்த தகவல்களையடுத்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இத்தாக்குதலில் மாளிகை பலத்த சேதமடைந்துள்ளதோடு பொதுமக்கள் பலரும் கொல்லப்பட்டுள்ளனர்.

தரைக்குக் கீழ் சென்று வெடிக்கக் கூடிய இந்தக் குண்டுகளின் தாக்குதல்களால் பாரிய குழிகள் தோன்றியுள்ளதோடு அருகில் இருந்த கட்டடங்கள் பலவும் சேதமடைந் [illegible] ள்ளன.

இதேவேளை, நாளுக்குநாள் காயமடைந்து வரும் பொதுமக்கள் அதிகரித்து வருவதால் ஈராக் வைத்தியசாலைகளில் இட நெருக்கடியும், மருந்துத் தட்டுப்பாடும் நிலவுவதாக உலக சுகாதார ஸ்தாபனத்தினர் கூறியுள்ளனர். வைத்தியசாலைகள் காயமடைந்தவர்களால் நிரம்பி வழிகின்றன.



விமானக்குண்டு வீச்சில் தரைமட்டமாகிய கட்டடங்கள்

(முன்னர் கிடைத்த செய்தி 3ம் பக்கத்தில்)

## வீதி ஓட்டப் போட்டி

தமிழீழ விளையாட்டுத்துறையின் ஏற்பாட்டில் எதிர்வரும் சித்திரை வருடப்பிறப்பன்று நடைபெற இருக்கின்ற மாபெரும் வீதி ஓட்டப் போட்டிக்கு விண்ணப்பித்தவர்கள். விண்ணபிக்க இருக்கின்றவர்களில் எதிர்வரும் 14ஆம் திகதிகாலை 5மணிக்கு முல்லைத்தீவு மாவட்டபோட்டியாளர்கள் மாங்குளத்திற்கும், கிளிநொச்சி மாவட்ட போட்டியாளர்கள் வன்னி மாவட்ட செயலகத்திற்கும் (கிளி.மத்திய மைதானம்) சமுகம் தருமாறு வேண்டப்பட்டுள்ளனர். முன்னர் அறிவிக்கப்பட்டதன் படி 14-04-2003 அன்று காலை 6 மணிக்குப் போட்டி ஆரம்பமாகுமெனவும் தங்களுக்கான விண்ணப்பங்களை தமது செயலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் வன்னி மாவட்ட விளையாட்டுத்துறையினர் தெரிவித்துள்ளனர். (சோ.லோ)

# அமெரிக்கப்படைகளின் தாக்குதலில் மூன்று ஊடகவியலாளர்கள் பலி!

பாக்தாத்தில் அமெரிக்கப் படைகள் நடத்திய மூன்று வெவ்வேறு தாக்குதல்களில் மூன்று ஊடகவியலாளர்கள்



அமெரிக்கத் தாக்குதலில் கொல்லப்பட்ட சுவீடன் நாட்டுப் பத்திரிகையாளர்(வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவேளையில்...)

பலியாகினர். மேலும் சிலர் காயமடைந்தனர்.

ராய்ட்டரின் படப்பிடிப்பாளரான தாராஸ் தங்கியிருந்த விடுதி மீது அமெரிக்க தாங்கி ஒன்று நடத்திய தாக்குதலில் அவர் கொல்லப்பட்டுள்ளார். ஸ்பெயினின் தொலைக்காட்சிச் சேவை ஒன்றின் படப்பிடிப்பாளரான யூசும் இத்தாக்குதலில் காயமடைந்தபின் வைத்தியசாலையில் மரணமடைந்துள்ளார்.

அத்துடன் அல்சயீரா தொலைக்காட்சி நிலையம் மீது அமெரிக்க விமானங்கள் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதல்களில் அது பலத்த சேதமடைந்ததோடு அங்கிருந்த அல்சயீரா தொலைக்காட்சித் சேவையின் படப்பிடிப்பாளர் அயூப் கொல்லப்பட்டுள்ளார்.

இந்த ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டது குறித்து பக்கச் சார்பற்ற விசாரணை நடத்த வேண்டும் என்று அனைத்துலக செய்தியாளர் சம்மேளனம் கேட்டுள்ளது. இத்தாக்குதல்கள் மிக மோசமான அனைத்துலக சட்டமீறலாகும். இத்தாக்குதல் வேண்டுமென்றே செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதில் சந்தேகம் ஏதுமில்லையென அனைத்துலக செய்தியாளர்கள் தலைவர் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர் தங்கியிருந் விடுதிகள் மீது குண்டு போடப்பட்டது. சனநாயகத்தின் பெயரால் நடத்தப்படும் போரில் அதிர்ச்சியளிக்கக் கூடிய சம்பவங்களாகும் என்றும் கூறியுள்ளார்.

### கண்காணிப்புக்குழு...

தனர். பிற்பகல் 1.00 மணிவரை இச்சந்திப்பு இடம்பெற்றது.

திருமலையில சிறிலங்கா படையினரின் ஆக்கிரமிப்புப் பகுதியில விடுதலைப்புலிகளின் இரவுநேர நடமாட்டம் பற்றியதில் முக்கியமாக கலந்துரையாடப்பட்டன.

திருகோணமலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சிறிலங்கா இராணுவ பகுதிகள் உள்ளதால் அவற்றூடாக போராளிகள் மேற்கொள்ளும் நகர்வுகள் தொடர்பாக எதிர்வரும் 21 ஆம்திகதி மூதூர் நடுநிலைப்பகுதியில். தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும், சிறிலங்காப்படை அதிகாரிகளும் கண்காணிப்புக் குழுவினரும் சந்தித்து உரையாடி இது தொடர்பான தீர்வை எட்டுவது என்று முடிவ எடுக்கப்பட்டுள்ளதாக கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலவ்சன் தெரிவித்தார்.

சம்பூரில் கண்காணிப்புக்குழு அலுவலகம் ஒன்றை அமைக்க உள்ளதாகவும் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை 47 இல் இருந்து 57 ஆக உயர்த்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கிடையே படையினரின் பிடியில் உள்ள பகுதிகள் ஊடாக போராளிகளுக்கான மருந்துகள் மற்றும் உணவுப் பொருட்களை எடுத்துச் செல்லத்தக்கதான தீர்வு ஒன்று 21 ஆம் திகதிக் கூட்டத்தில் கிடைக்க வேண்டும். அல்லாதுவிடில் எமது போராளிகளுக்குத் தேவையான மருந்து மற்றும் உணவுப் பொருட்களை நாமே எடுத்துச் சென்று வழங்க நடவடிக்கை எடுப்போம் இதனை போர்நிறுத்த மீறலாகக் கருதக்கூடாது என்று கண்காணிப்புக் குழுவினரிடம் தெரிவித்துள்ளோம் என்று தளபதி கேணல் பதுமன் தெரிவித்துள்ளார்.

இப்பகுதிகள் ஊடாக போராளிகள் ஆயுதங்கள் இல்லாமலே இதுவரை மருந்து, உணவுப் பொருட்களை எடுத்துச் சென்றனர். இந்த வழங்கல் கடந்த ஒரு வருடகாலமாக கண்காணிப்புக் குழுவினரின் மேற்பார்வையிலேயே நடைபெற்றுவந்துள்ளது. இதை சிறிலங்கா இராணுவம் தற்போது தடுத்துள்ளது.

திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் பற்றிய வரைபடங்களுடன் கூடிய விபரங்களை ஒரு ஆண்டின் பின்னர் மீண்டும் இக்கூட்டத்தில் வைத்து கண்காணிப்புக்குழுத் தலைவரிடம் வழங்கி உள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### கரடிப்போக்கு...

கொண்டிருக்கையிலேயே வீதியை விட்டு விலகி குடைசாய்ந்து பலத்த சேதத்திற்குள்ளானது.

பஸ் வண்டியில் பயணம் மேற்கொண்ட சாரதி உட்பட மூவர் எதுவித காயமுமின்றித் தப்பித்துக் கொண்டனர்.

இப்பகுதியில் கடந்த பலமாத காலமாக சில வாகனங்கள் குடைசாய்ந்து பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளன.

அத்துடன் இம்மதகு உடைந்துள்ளதுடன் பற்றைகள் மூடியுள்ளதன் காரணத்தால் உடைந்துள்ள மதகு தெரியாது இப்பகுதியூடாக பயணிக்கும் வாகனங்கள் விபத்துக்குள்ளாக வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

அத்துடன் இவ்விடத்தில் எவ்வித அறிவுறுத்தல்களும் எதுவும் காணப்படாதுள்ளமையின் காரணமாக மென்மேலும் இப்பகுதியில் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறுவதற்கு வாய்ப்புள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ.லோ)

### இசை, நடன...

யினை திருகோணமலை போர்ப் பயிற்சித் தளபதி கில்மன் ஏற்றி வைத்தார்.

பொதுச்சுடரினை மாவீரர் மேஜர் கஜேந்திரனின் தாயார் ஏற்றினார். தொடர்ந்து அரங்க செயற்பாட்டுக் குழுவின் நெறியாள்கையில் வவுனியா றம்பைக்குளம் மகளிர் வித்தியாலய மாணவிகளின் வரவேற்பு நிகழ்வு இடம் பெற்றது. வரவேற்புரையினை ப.விக்கினேஸ்வரன் நிகழ்த்தினார்.

சிறப்புரையினை யாழ்மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி நிகழ்த்தினார். தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (25)

### திருமலை...

நானூற்றி எண்பது கலைஞர்கள் சங்கமித்திருக்கின்றார்கள். திருகோணமலையே அசைந்து நிற்பது போன்ற உணர்வுடன் மக்கள் உவர்மலையில் பிரமாண்டமான விவேகானந்தா கல்லூரி மண்டபத்தில் கூடி உள்ளனர்.

இதுவரை காலமும் அசைவதற்கு கொஞ்சம் அச்சப்பட்டிருந்த திருகோணமலை, இன்றிலிருந்து அசையத் தொடங்கியுள்ளது. விழிப்புக்கொள்ளத் தொடங்கி உள்ளது.

விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக் கழகத்தின் பொறுப்பாளர் என்ற ரீதியில் நான் பெருமைப்படுகின்றேன்.

இந்தச் சமாதான நேரத்திலே, சமாதானத்துக்கான காலத்திலே விடுதலைப் புலிகள் அமைப்பு சமாதானத்திற்கான சகல முன்னெடுப்புக்களையும் முன்னெடுத்தது என்ற ஒரு சொல் எமக்குப் போதும் என்றார்.

### பசுகி...

ஐ.நா. செயலாளர் கொபி அனானை அவர் நியூயோர்க்கில் சந்திக்கவுள்ளதுடன் அமெரிக்கா கூட்டவுள்ள மாநாட்டிலும் அவர் கலந்து கொள்ளவுள்ளார்.

### அமெரிக்க...

விதார் கெல்கேசன் சிறிலங்காவின் பொருளாதார மீள் கட்டமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட ஆகியோர் இலங்கையின் சமாதான முயற்சிகுறித்து உரையாற்றவுள்ளார்.

### கண்காணிப்புக்குழுவின்...

பட்டது தொடர்பாக இறுதித்தீர்மானம் எடுக்கும்போது தான் தெரிவித்த முக்கியமான விடயங்களை கவனத்தில் கொள்ளுமாறு போர்நிறுத்த கண்காணிப்புக்குழு விற்கு அறிவித்திருந்த போதிலும்அதனை அந்தக் குழு பொருட்படுத்தவில்லை.

விடுதலைப்புலிகள் கடற்படையினர் தவிர்ந்த மூன்றாம் தரப்பு ஒன்றே சீன மீன்பிடிப் படகு மீது தாக்குதல் நடத்தியிருக்கலாம் என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளதுடன் இவ்வாறான சம்பவங்களைத் தடுக்க சிறிலங்கா அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் இலங்கைக் கடற்பரப்பில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்று யோசனையும் முன்வைத்துள்ளது. இதன் அடிப்படையிலேயே கண்காணிப் புக்குழு மீது சனாதிபதி குற்றம் சாட்டியுள்ளதாகவும் சனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது கண்காணிப்புக்குழுவின் தீர்மானத்தையோ அல்லது யோசனைகளையோ எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது. அத்துடன் அவற்றிற்கு எவ்விதசட்ட அங்கீகாரமும் இல்லை என்று தெரிவித்துள்ள சனாதிபதி செயலக அறிக்கை இலங்கை கடற்படையினருடன் விடுதலைப் புலிகளை ஒப்பிடுவதன் மூலம் விடுதலைப்புலிகள் தனியான அரசாங்கம் ஒன்றை நடத்துவதாகக்காட்டப்படுகிறது என்றும் இந்த நிலையில் கண்காணிப்புக்குழுவின் அறிக்கை பக்கச்சார்பான தெனக்கருதக் கூடிய சாத்தியங்கள் இருப்பதனால் சீனப்படகு மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் குறித்து விசேட விசாரணை ஒன்றை மேற்கொண்டு இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு சனாதிபதி கடற்படைத்தளபதிக்கு உத்தரவிட்டுள்ளார். என்றும் சனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


**நீங்களும் படப்பிடிப்பாளராகலாம்**

**பயிலுனர் தேவை**

- வீடியோ, புகைப்பட துறைசார் பயிற்சியுடன் கூடிய வேலை வாய்ப்புக்கு, இத்துறைசார் முயற்சியுள்ளவர்கள் நேரில் தொடர்பு கொள்ளவும்.
- கணக்கு எழுதுநர், கணக்காளர் தேவை

யாழ். ஒளி வீடியோ புகைப்பட சேவை (K.S.R. PHOTOS)

**கனகபுரம் தெரு (சந்தைக்கருகாமை) - கிளிநொச்சி**

**766, K.K.S வீதி, தட்டாதெருச்சந்தி - யாழ்ப்பாணம்.**

(சீ-8062)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.